தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 070 /ந/2023
நாள் 25.07.2023

திரு. P.வெள்ளைச்சாமி,
மணப்பாறை,
திருச்சிராப்பள்ளி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
மணப்பாறை நகராட்சி,
திருச்சிராப்பள்ளி மாவட்டம். – எதிர் மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை நகரம், மணப்பாறைப்பட்டிரோடு, NSK நகர், எண்.92/7 என்ற முகவரியில் வசிக்கும் திரு. P.வெள்ளைச்சாமி என்பவரின் 14.03.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.03.2023 அன்று பெறப்பட்டு 070/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனு மீது, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை நகரம், மணப்பாறைப்பட்டிரோடு, NSK நகர், எண்.92/7 என்ற முகவரியில் வசிக்கும் திரு. P.வெள்ளைச்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை நகரம், வார்டு எண்.27, மணப்பாறைப்பட்டி ரோடு, NSK நகருக்கு அடிப்படை வசதிகளான சாலைவசதி, தெருவிளக்கு வசதி, கழிவுநீர் வசதி செய்து கொடுக்கப்படவில்லை. அதனால் நானும், பொதுமக்களும் மிகவும் சிரமப்பட்டு வருகிறோம். மேற்படி அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தால் சுகாதார கேடு மற்றும் திருட்டு சம்பவங்களும் நடைபெற்று வருகின்றது.

ஆகவே சமூகம் அவர்கள் தயவு செய்து மணப்பாறை நகரம், வார்டு எண்.27, மணப்பாறைப்பட்டி ரோடு, NSK நகருக்கு அடிப்படை வசதிகளான சாலை வசதி, தெருவிளக்கு வசதி, கழிவுநீர் வசதி செய்து கொடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 05.04.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் மணப்பாறை நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

மணப்பாறை நகராட்சி ஆணையாளர் தனது 19.05.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

(1) மனுதாரர் அடிப்படை வசதிகள் கோருமிடம் நகர நில அளவை ஆவணங்களின்படி வார்டு எண். 'ஜி', பிளாக் எண்.09, நகரளவு எண்.6/1 கொண்ட 6.70 ஏக்கர் பரப்பளவை கொண்டது. இந்த இடம் திரு.தனபால் மக்கள் 1.திரு.தானப்பன், 2. திரு.ஸ்ரீராமுலு மற்றும் 3. திரு.கண்ணன் ஆகியோருக்குச் சொந்தமான இடமாகும்.

(2) திரு.தனபால் மக்கள் 1.திரு.தானப்பன், 2.திரு.ஸ்ரீராமுலு மற்றும் 3. திரு.கண்ணன் ஆகிய மூவரும் 2010 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே சுமார் 86 மனைகளுக்கு மேல் மனைப்பிரிவு ஏற்படுத்தி விற்பனை செய்த விவரம் நாளது தேதிவரையிலான பதிவுத்துறை வில்லங்கச் சான்று மூலம் கண்டறியப்பட்டது.

(3) மேற்படி சுமார் 86 மனைகள் கொண்ட மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துறையால் (அ) நகராட்சியால் அனுமதி வழங்கப்பட்ட விவரங்கள் மற்றும் இம்மனைப்பிரிவில் உள்ள சாலைகள் நகராட்சி ஆணையாளர் பெயரில் தானப்பத்திரம் எழுதி ஒப்படைப்பு செய்யப்படாததால், நகராட்சி பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்யப்படாமல் திரு.தனபால் மக்கள் 1.திரு.தானப்பன், 2.திரு.ஸ்ரீராமுலு மற்றும் 3.திரு.கண்ணன், ஆகியோரின் பெயரிலேயே உள்ளதால் அடிப்படை வசதிகள் செய்ய இயலாத நிலை உள்ளது.

(4) மனுதாரர் அடிப்படை வசதிகளான சாலை, தெருவிளக்கு மற்றும் கழிவுநீர் வாய்க்கால் வசதி ஏற்படுத்தி தரக்கோருமிடம் அனுமதி பெறாத மனைப்பிரிவில் அமையப்படின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையால் வெளியிடப்பட்ட அரசாணை எண்கள்.78/ நாள் 04.05.2017, 172 நாள் 13.10.2017, 55/ நாள் 02.05.2018, 21/ நாள் 05.02.2019 மற்றும் 40/நாள் 26.02.2021–ல் தெரிவிக்கப்பட்டபடி, மனுதாரர் மனை அமைந்துள்ள இடமானது அனுமதி பெறாத மனைப்பிரிவு என்பதால் நாளது தேதிவரை வரன்முறைப்படுத்தப்பட்ட விவரம் (அ) நகர் ஊரமைப்பு துறைக்கு விண்ணப்பம் செய்த விவரங்களை வழங்கினால் அரசாணைகளின்படி அம்மனைப்பிரிவில் உள்ள மனையின் உரிமையாளர்கள் உரிய கட்டணங்களை செலுத்தினால், பரிசீலனை செய்யப்பட்டு முன்னுரிமைஅளித்து அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தர நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் மணப்பாறை நகராட்சி ஆணையாளர் 23.05.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 10.05.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

மனுதாரர் திரு. P.வெள்ளைச்சாமி என்பவருக்கு இருதய அறுவை சிகிச்சை செய்துள்ளதன் காரணமாக 23.05.2023 அன்றைய விசாரணைக்கு வர இயலவில்லை எனவும் மற்றொரு வாய்ப்பினை அளிக்குமாறும் கோரியிருந்தார்.

(4) எதிர்மனுதாரரான மணப்பாறை நகராட்சி ஆணையாளர் மற்றும் நகரமைப்பு அலுவலர் ஆகிய இருவரும் 23.05.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்கள்.

"மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள மணப்பாறை நகராட்சி வார்டு எண் 27, என்.எஸ்.கே நகர்ப்பகுதியில் அமைந்துள்ள வீடுகளுக்கு சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. மனைகள் வரன்முறை படுத்தப்படவில்லை. மேற்கண்ட மனைப்பிரிவுகள் வரன்முறைபடுத்தப்படாத நிலையில் அங்கு அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி மற்றும் கழிவுநீர் அகற்றுதல் மற்றும் சாலை வசதிகள் நகராட்சியால் செய்து தரப்படவில்லை.

மேலும் மேற்கண்ட இடத்தில் 2010 ஆம் ஆண்டுக்கு முன்பே மனைப் பிரிவுகளை ஏற்படுத்தி விற்பனை செய்துள்ளனர். சுமார் 86 மனைகள் கொண்ட மனைப் பிரிவில் உள்ள சாலைகள் நகராட்சி பெயரில் தான பத்திரம் எழுதி ஒப்படைவு செய்யாமல் மனைகளின் உரிமையாளர்களான திரு தனபால் மற்றும் இருவர் பெயரிலேயே உள்ளதால், தெரு விளக்கு மற்றும் சாலை வசதிகள் மேற்கண்ட இடத்தில் செய்ய இயலவில்லை. மனைப் பிரிவின் வரைபடம் (lay out) வளர்ச்சிக் கட்டணம் 50% மற்றும் அரசுக்கு செலுத்தவேண்டிய கட்டணங்களை அங்குள்ள மனையின் உரிமையாளர்கள் செலுத்தும்பட்சத்தில், அங்கு முன்னுரிமை அளித்து அடிப்படை வசதிகளை உடன் ஏற்படுத்திட நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் மணப்பாறை நகராட்சி ஆணையரின் 19.5.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளார்கள்.

(5) மனுதாரர் திரு. P.வெள்ளைச்சாமி என்பவர் கோரியிருந்தபடி அவருக்கு மற்றொரு வாய்ப்பு அளிக்கும் வகையில் 14.06.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 25.05.2023 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

மனுதாரர் திரு. P.வெள்ளைச்சாமி என்பவர் 14.06.2023 அன்றைய விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"மேற்கண்ட முகவரியில் வசிக்கும் நான் எங்களது நகரான என் எஸ் கே நகரில் (சர்வே எண் 732/1) அடிப்படை வசதிகள் நகராட்சியினரால் செய்து தரப்படவில்லை. போதுமான அடிப்படை வசதிகளான சாலை வசதி, தெருவிளக்கு மற்றும் கழிவுநீர் செல்வதற்கான வசதிகள் செய்து தரப்படாததால் எங்கள் பகுதியில் சுகாதாரக் கேடு ஏற்படும் அபாயம் உள்ளது. இது குறித்து நகராட்சி அலுவலர்களிடம் புகார் அளித்தும் எவ்வித பயனும் இல்லை. மேலும் எங்கள் நகரில் உள்ள மண்சாலையை மாற்றி தார்ச்சாலை அமைத்திட நாங்கள் மனு அளித்திருந்தோம். ஆனால், எங்கள் பகுதியில் உள்ள மனைப் பிரிவின் 'லே அவுட்' நகலை அளித்தால்தான் எங்கள் பகுதியில் தார்ச்சாலை அமைக்க இயலும் என நகராட்சியினர் தெரிவித்துள்ளனர். ஆனால், அதே என் எஸ் கே நகர் பகுதியில் வேறொரு இடத்தில் எவ்வித நகலையோ அல்லது தானப் பத்திரத்தின் நகலையோ கோராமல் நகராட்சியினர் தார்ச்சாலை அமைத்துள்ளனர். இது குறித்தும் நகராட்சியில் புகார் அளிக்கப்பட்டது. மேற்கண்ட இடத்தை நேரில் ஆய்வு செய்த நகராட்சி ஆணையர், விரைவில் தார்ச்சாலை அமைக்கப்படும் என உறுதி அளித்திருந்தார். ஆனால், இதுவரை எங்கள் பகுதியில் தார்ச்சாலை அமைக்கப்படவில்லை.

எனவே, எங்கள் பகுதியில் உள்ள மண்சாலைகளை மாற்றி தார்ச்சாலைகளை நகராட்சியினர் அமைத்திடவும், போதுமான அடிப்படை வசதிகளை நகராட்சியினர் செய்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பான என் எஸ் கே நகரில் (சர்வே எண் 732/1) போடப்பட்ட மனைப் பிரிவுகள் குறித்த நகலை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(6) மனுதாரரின் புகார் மனு குறித்து மனுதாரரிடம் 14.06.2023 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்ட நிலையில், இது தொடர்பாக கூடுதல் விளக்கங்கள் கோரும் வகையில் நகராட்சி ஆணையரிடம் 21.06.2023 அன்று மறுவிசாரணை நடத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அழைப்பாணை அனுப்பப்பட்டது. ஆனால் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 21.06.2023 அன்று மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றதால் மறுவிசாரணைக்கு மற்றொரு தேதியினை நிர்ணயம் செய்யுமாறு வேண்டியிருந்ததால் நகராட்சி ஆணையரின் வேண்டுகோளை ஏற்று, 04.07.2023 அன்றைய விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

(7) எதிர்மனுதாரரான மணப்பாறை நகராட்சி ஆணையாளரும் மற்றும் நகரமைப்பு அலுவலரும் ஆகிய இருவரும் 04.07.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்கள்.

"மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணப்பாறை நகராட்சி வார்டு எண் 27 NSK நகரில் உள்ள மனைப்பிரிவில் உள்ள இடத்தில் சாலை அமைத்திட முற்படும்போது, அங்குள்ள மனைப்பிரிவு குறித்து வழக்கு நிலுவையில் இருந்த காரணத்தினால் அங்கு நகராட்சியால் சாலை அமைக்கக்கூடாது என தடுத்துவிட்டனர். இம்முறை மன்றத்தில் 23.5.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் நாங்கள் இருவரும் கலந்துகொண்ட பின்னர்தான் மேற்கண்ட வழக்கு குறித்து எங்களுக்கு தெரியவந்தது. தற்போது மேற்கண்ட வழக்கு ( O.S No/ 171/2021) 27.4.2023 அன்று முடிவுக்கு வந்த நிலையில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடத்தில் சாலை அமைப்பதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதிக்கும், தொழில் நுட்ப அனுமதிக்கும் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகள் விரைவில் தொடரப்பட்டு 3 மாத காலத்தில் பணிகள் முடிக்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் நகராட்சி ஆணையரின் 27.6.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவுசெய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளார்கள்.

(8) மணப்பாறை நகராட்சி ஆணையாளர் தனது 27.06.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

மனுதாரர் மனுவில் தெரிவித்துள்ள சாலை, மணப்பாறை நகராட்சியில் சிறப்பு சாலை திட்டம் 2020–21 –ன் கீழ் சிப்பம் –4 (Package –4) ல் வ.எண்.5 மற்றும் 6–ல் ரூ 30.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி எடுத்துக்கொள்ளப்பட்டு, அதில் 1 பணியான நேதாஜி சாலை பணி (வரிசை எண்.6) செய்து முடிக்கப்பட்டு, மற்றொரு பணியான நேதாஜி குறுக்குத் தெரு (வரிசை எண்.5) சாலைப்பணி குறித்து திருச்சிராப்பள்ளி கூடுதல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.O.S.No.171/2012–ன்படி பட்டா உரிமையாளர்களுக்குள் குடும்ப பாகப்பிரிவினை வழக்கு நடைபெற்றதால் சாலைப்பணி மேற்கொள்ள இயலவில்லை.

மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் சுற்றறிக்கையில் ஒவ்வொரு மாநகராட்சி / நகராட்சி பகுதிகளில் சாலைப் பணிகள் மேற்கொள்ளும் போது, நகர் ஊரமைப்பு துறையால் அனுமதி பெற்ற (அ) வரன்முறைப்படுத்தப்பட்ட சாலைகள், நகராட்சி ஆணையாளர் பெயரில் பதிவு செய்யப்பட்ட தானப்பத்திரம் (அ) பட்டா நகல் ஏதேனும் ஒன்றினை இணைத்து விரிவான

திட்ட அறிக்கை தயார் செய்து அனுமதி பெறப்பட்ட பின்னரே பணிகள் மேற்கொள்ள வழிகாட்டுதல் வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரர் அடிப்படை வசதிகளான சாலை, தெருவிளக்கு மற்றும் கழிவுநீர் வாய்க்கால் வசதி ஏற்படுத்தி தரக்கோருமிடம், அரசாணை எண்கள்.78/நாள் 04.05.2017, 172/நாள் 13.10.2017, 55/நாள் 02.05.2018, 21/நாள் 05.02.2019 மற்றும் 40/நாள் 26.02.2021 (வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை) இன்படி, அனுமதி பெறாத மனைப்பிரிவாகவே உள்ளதால், தொடரப்பட்ட வழக்கு, வரன்முறைப்படுத்த வழங்கப்பட்ட கால அவகாசத்தில் முடிவு பெறாமல் நிலுவையில் இருந்த காரணமாக நாளது தேதிவரை வரன் முறைப்படுத்தப்படவில்லை. தொடரப்பட்ட வழக்கு எண். O.S.No.171/2012–க்கு 27.04.2023 அன்று தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதில், மனுதாரர் மனை / வீடு அமையும் அனுமதி பெறாத மனைப்பிரிவினை, வரன்முறைப்படுத்த ஒரு நபரிடமிருந்து மட்டும் வரன்முறைப்படுத்திய கட்டணம் பெறப்பட்டதின் அடிப்படையில், இம்மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாலும், தற்போது இம்மனைப்பிரிவு சாலைகளுக்கு மதீப்பீடு தயார் செய்யப்பட்டு, நிர்வாக அனுமதிக்கும், தொழில் நுட்ப அனுமதிக்கும், நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுமதி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கருத்துருவிற்கு அனுமதி பெறப்பட்டவுடன் முன்னுரிமை அடிப்படையில் சாலை, தெருவிளக்கு மற்றும் கழிவுநீர் வாய்க்கால் வசதி ஏற்படுத்தி தர நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன் என தெரிவித்துள்ளார்.

(9) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், மணப்பாறை நகராட்சி ஆணையரின் அறிக்கைகள், வாக்குமூலங்கள் மற்றும் நகரமைப்பு அலுவலராக பணிபுரியும் திரு.வெங்கடேசன் என்பவரது வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:–

பிரிவு "7" The Ombudsman shall perform all or any of the following functions namely:-

7 (c) where the irregularity is due to willful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும், இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறையைச் சேர்ந்த மனுதாரர் திரு.P.வெள்ளைச்சாமி என்பவர் தனது 14.03.2023 நாளிட்ட மனுவில் மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.27, மணப்பாறைப்பட்டி ரோடு, NSK நகருக்கு அடிப்படை வசதிகளான சாலை வசதி, தெருவிளக்கு அமைத்தல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வசதிகள் நகராட்சியால் செய்து தரப்படவில்லை என புகாராகத் தெரிவித்து இதற்கு ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

மனுதாரர், அடிப்படை வசதிகள் கோரும் இடமானது மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.G, பிளாக் எண்.09, நகரளவு எண்.6/1–ல் 6.70 ஏக்கர் பரப்பளவில் உள்ள திரு.தனபால் என்பவரின் வாரிசுதாரர்களுக்கு சொந்தமான இடத்தில், 86 மனைப்பிரிவுகள்

விற்பனை செய்யப்பட்டுள்ள நிலையில், நகர் ஊரமைப்பு துறையால் (அ) நகராட்சியால் அனுமதி வழங்கப்பட்ட விவரம் மற்றும் இம்மனைப்பிரிவில் உள்ள சாலைகள் நகராட்சியின் பெயரில் தானப்பத்திரம் எழுதி ஒப்படைப்பு செய்யப்படாமல், மனைகளின் உரிமையாளர்கள் பெயரில் உள்ளதால் அடிப்படை வசதிகள் செய்ய இயலவில்லை என மணப்பாறை நகராட்சி ஆணையர் தனது 19.05.2023 நாளிட்ட அறிக்கையிலும் மற்றும் 23.05.2023 அன்றைய வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ள நிலையில், மனுதாரர் 14.06.2023 அன்று நடைபெற்ற விசாரணையின் போது தனது வாக்குமூலத்தில் NSK நகரில் வேறொரு இடத்தில் எவ்வித ஆவண நகலையோ அல்லது தானப்பத்திரத்தின் நகலையோ கோராமல் நகராட்சியினர் தார்சாலை அமைத்துள்ளனர் என தெரிவித்து அதற்கான வரைப்படத்தின் நகலையும் சமர்ப்பித்துள்ளார்.

மேற்காணும் மனுதாரரின் வாக்குமூலம் குறித்து கூடுதல் விளக்கங்கள் கோரும் வகையில் 04.07.2023 அன்று நகராட்சி ஆணையர் மற்றும் நகரமைப்பு அலுவலரிடம் நடத்தப்பட்ட மறுவிசாரணையில், மனுதாரர் புகாராக தெரிவிக்கும் இடத்தில் நகராட்சியால் சாலைப்பணிகள் மேற்கொள்ளும் போது அங்குள்ள மனைப்பிரிவு குறித்து திருச்சிராப்பள்ளி மாவட்ட 3வது கூடுதல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, வழக்கு நிலுவையில் இருந்த காரணத்தினால் நகராட்சியால் சாலை அமைப்பதற்கு தடை செய்தனர் எனவும், தற்போது வழக்கு 27.04.2023 அன்று முடிவுற்று, மேற்காணும் சாலைப்பணிகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், 3 மாதக் காலத்திற்குள் பணிகள் முடிக்கப்படும் எனவும் நகராட்சி ஆணையரும் மற்றும் நகரமைப்பு அலுவலரும் தெரிவித்துள்ளனர்.

மனுதாரரின் புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.03.2023 அன்று பெறப்பட்டதும், 05.04.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் மணப்பாறை நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கைக் கோரியதில் 19.05.2023 நாளிட்ட அறிக்கை மற்றும் 23.05.2023 அன்றைய வாக்குமூலத்தில் வரன்முறைப்படுத்தாத மற்றும் நகராட்சி பெயரில் இல்லாத மனை என்பதாலும் தானப்பத்திரம் ஒப்படைப்பு செய்யப்படாததாலும் அடிப்படை வசதிகள் செய்ய இயலவில்லை என தெரிவித்து உள்ளார். ஆனால் 04.07.2023 அன்றைய வாக்குமூலத்தில் மனைப்பிரிவு குறித்து வழக்கு தொடரப்பட்டு, முடிவுற்றதால் சாலைப்பணிகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவும் நகராட்சி ஆணையாளர், நகரமைப்பு அலுவலர் ஆகிய இருவரும் ஒவ்வொரு விசாரணையிலும் முரண்பாடான விளக்கங்கள் அளித்துள்ளதன் மூலம், மனுதாரரின் புகார் குறித்து தீவிர விசாரணை மேற்கொள்ளாமல், இம்முறைமன்ற நடுவத்தை தவறாக வழிநடத்தும் வகையில் மணப்பாறை நகராட்சி ஆணையாளர் மற்றும் நகரமைப்பு அலுவலரின் செயல்பாடுகள் அமைந்துள்ளது தெளிவாகிறது. இதனை இம்முறைமன்ற நடுவம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது. இவ்வாறு பணியில் கடமை தவறியும், பொறுப்பற்ற முறையிலும் மற்றும் உள்நோக்கத்துடன் நடந்து கொண்ட மணப்பாறை நகராட்சி ஆணையாளர், நகரமைப்பு அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மீது உரிய விதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

The bluff, suppression of facts and misleading this Forum during the first hearing by the Commissioner and Town Planning Officer are severely condemned. They came out with altered information to suit their convenience at present without properly verifying the facts of the complainant petition in an efficient manner. This exposes the perverse mindset of the Local Body authorities of Manappari Municipality who labour under the false impression that they could do anything at their whims and fancies without caring for the total welfare of the whole community

living in a habitat by providing the basic infrastructural facilities like drainage, roads, lights, drinking water supply etc., The DMA is directed to issue suitable instructions to the Manappari Municipality Commissioner to provide the community infrastructure as requested by the petitioner as early as possible and as undertaken by the Commissioner and Town Planning Officer within a period of 3 months. Otherwise this kind of discriminatory partiality will incur the displeasure and negativity of the local people that would needlessly bring adverse impact on the Local Administration image when Tamil Nadu State is in the vanguard of being a model people – centric welfare illustration in the whole country.

2023 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 25–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. P.வெள்ளைச்சாமி,
92/7, NSK நகர், மணப்பாறைப்பட்டி ரோடு,
மணப்பாறை – 621 306, திருச்சி மாவட்டம்.

2) ஆணையாளர், மணப்பாறை நகராட்சி,
திருச்சி மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்

25/07/23